THE HINDU - ENGLISH
Dated: 14.02.2025

# Aaditya meets Kejriwal, Rahul; flags concerns over 'electoral irregularities'

Abhinav Deshpande
MUMBAI

Shiv Sena (UBT) leader Aaditya Thackeray met Aam Aadmi Party (AAP) convener Arvind Kejriwal in Delhi on Thursday, raising concerns over alleged electoral irregularities and the state of democracy in the country.

Accompanied by senior Shiv Sena (UBT) leaders Sanjay Raut and Priyanka Chaturvedi, Mr. Thackeray discussed the outcome of the Delhi Assembly election, which the BJP won, and the future of the Opposition INDIA bloc. The AAP has accused the Congress – its ally in the INDIA bloc – of undermining its chances on at least 13 seats.

Addressing reporters after the meeting, Mr. Thackeray described his interaction with Mr. Kejriwal as a "gesture of friendship" but expressed concerns about the fairness of elections. "Governments come and go, but relationships continue. We met Kejriwal in the spirit of friendship. However, our democracy is not free and fair. Elections are not free and fair," he said.



AAP leader Sanjay Singh with Shiv Sena (UBT) leader Aaditya Thackeray in New Delhi. SHASHI SHEKHAR KASHYAP

Mr. Thackeray alleged large-scale voter list manipulations by the Election Commission in States like Maharashtra, Haryana, Odisha, and Delhi. "The EC has taken away people's right to vote. It is not even willing to discuss this issue," he said.

Reiterating the need for electoral integrity, Mr. Thackeray stressed, "Free and fair elections are fundamental to the country's democracy."

With cracks widening in the Opposition Maha Vikas Aghadi in Maharashtra, Mr. Thackeray also met Congress leader Rahul Gandhi late on Wednesday, reportedly to discuss the alliance's internal discord. The meeting follows Nationalist Congress Party (SP) supremo Sharad Pawar's decision to honour Maharashtra Deputy Chief Minister Eknath Shinde, a move that has triggered unease within the bloc.

DECCAN Chronicle

14 FEBRUARY 2025

# SC's harsh view of freebies right, but problem deeper

Should you give a man a fish and you feed him for a day, or teach him to fish and you feed him for a lifetime, as per the Chinese proverb. In an ideal situation, it's always better to skill the man to earn his daily bread, and fish, too. But hunger is not something that can wait for the skill to come by him and hence the second best option, that of charity. Is it becoming the first option now is the new question, which a bench of the Supreme Court asked the other day. Instead of mainstreaming the beneficiaries, "are we not creating a class of parasites", wondered the learned judge. "Unfortunately, because of these freebies, which are declared just on the anvil of elections, such as the Ladki Bahin and other schemes, people are not willing to work," he added, basing his observation on personal experience.

A similar worry of high attrition and difficulty in finding people to replace the dropouts in the construction industry was aired by the engineering major L&T's chief executive officer. The sops that governments rain on the people stop them from coming to work in the industry and worse, they refuse to be relocated, he had complained.

The Ladki Bahin scheme of the Maharashtra government, which the judge mentioned, offers ₹1,500 a month to women aged between 21 and 65 years with an annual family income of less than ₹2.5 lakhs. The money the scheme offers the woman cannot buy her a coffee and snacks in a five-star hotel the wealthy in the country, including the corporate czars, would frequent but the women labourers feel it is sufficient for them not to want to return to work.

The primary inference one can draw from the anguish expressed by the judge and the L&T CEO is that those who ensured a steady supply of cheap labour have ceased to do what they have been doing for generations and instead chose to stay back home, tending their families as the government sops kept the home fire burning. A construction worker is paid ₹350 a day while an agricultural labourer is paid ₹300, if we were to go by the record. How much they take home in real terms remains unaddressed but they do not find it to be an offer that they cannot refuse.

These critics must realise, however, that there is nothing in the industrial or agricultural sectors that motivates the labourer to go to work, earn a bit more and live a better life. The government doles have now empowered those who have nothing to sell but physical labour to make a hard bargain of their product. In fact, it has helped them realise the value of their offering, and hence added to their dignity as human beings.

Yes, it can have an impact on those who so far profited from labour arbitrage. They must now think on the ways to incentivise human labour and make them come back to work instead of lamenting a bygone era of mindless exploitation. The very same corporate boss who aired this view had recently wondered why people cannot work 90 hours a week, which would translate into 15 hours a day in a six-day week and 18 hours a day in a five-day week. Such proposals cannot work as human beings discover their worth, albeit in small measures.

"Parasites" are those who indulge in the luxury of titles, power and pelf and still do not do justice to their calling; those who do domestic labour and help raise the future citizens of the country for ₹1,500 a month by no means fall in that category. They would, at some point in the future, refuse to feed the real parasites. We should welcome it rather than complain about that outcome.

THE NEW INDIAN EXPRESS

Dated: 14. 02. 2025

# EC must hold elections for AIADMK gen secy post: KC Palanisamy

Coimbatore: A day after the HC allowed the ECI to inquire into intra-party affairs in AIADMK, former MP KC Palanisamy on Thursday said the EC should withdraw the signing authority given to EPS as he is interim general secretary. Addressing media persons, KC Palanisamy, who is one of the petitioners in the case, said, "After withdrawing the signing authority, the EC should conduct elections for the general secretary post. I believe there is a high chance of a leadership change and freezing of the symbol." Meanwhile talking to media in Theni, OPS said he, along with V K Sasikala and TTV Dhinakaran are ready to join hands with EPS without any condition as it is essential to reunite before 2026 poll. ENS

THE HINDU - TAMIL

Dated: 14.02.2025

# இன்று தேர்தல் நடந்தால் பாஜக பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்

| கருத்துக்கணிப்பில் தகவல்

புதுடெல்லி

இந்தியா டுடே - சி வோட்டர் இணைந்து கடந்த ஜனவரி 2 முதல் பிப்ரவரி 9 வரை நாட்டின் அனைத்து மக்களவைத் தொகுதிகளிலும் மூட் ஆப் தி நேஷன் (MOTN) என்ற பெயரில் கருத்துக் கணிப்பு நடத்தின. இதில் 1,25,123 பேரிடம் கருத்து கேட்கப்பட்டது.

இதில் பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணிக்கு மக்களிடையே ஆதரவு பெருகியிருப்பதாக தெரியவந்துள்ளது.

கடந்த மக்களவைத் தேர்தலில் என்டிஏ 292 இடங்களில் வென்றது. 44 சதவீத வாக்குகளை பெற்றது. பாஜக பெரும்பான்மை பெறாததால் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது.

இந்நிலையில் இன்றைய தேதியில் மக்களவைத் தேர்தல் நடைபெற்றால் பாஜக மட்டும் 281 இடங்களை பெற்று பெரும்பான்மை பெறும், என்டிஏ 343 இடங்களை பெறும். அதன் வாக்கு சதவீதம் 3% உயர்ந்து 47% ஆக இருக்கும்.

இதுபோல் காங்கிரஸ் தலைமையிலான இண்டியா கூட்டணி கடந்த ஆண்டு தேர்தலில் 232 இடங்களை பெற்றது. இதில் காங்கிரஸ் மட்டும் 99 இடங்களை பெற்றது. இன்றைய தேதியில் தேர்தல் நடைபெற்றால் அக்கூட்டணியின் தொகுதி எண்ணிக்கை 188 ஆக குறையும். இதில் காங்கிரஸ் 78 இடங்களை மட்டுமே பெறும்.

## திமுக செல்வாக்கு

தமிழ்நாட்டை பொறுத்தவரை கடந்த ஆண்டு தேர்தலில் திமுக கூட்டணி 47%, பாஜக கூட்டணி 18%, அதிமுக கூட்டணி 23% வாக்குகள் பெற்றன.

இன்றைய தேதியில் தேர்தல் நடந்தால் திமுக கூட்டணி 5% உயர்ந்து 52 சதவீதமும் பாஜக கூட்டணி 3% உயர்ந்து 21 சதவீதமும் அதிமுக கூட்டணி 3% குறைந்து 20 சதவீதமும் வாக்குகள் பெறும் எனத் தெரியவந்துள்ளது.

DAILY THANTHI
Dated: 14.02.2025

# இரட்டை இலை சின்னம்: சுப்ரீம் கோர்ட்டில் ரவீந்திரநாத் கேவியட் மனு

புதுடெல்லி, பிப்.14–

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பதவி, இரட்டை இலை சின்னம் உள்ளிட்ட விவகாரத்தில் தேர்தல் கமிஷன் தலையிட தடை இல்லை என்று சென்னை ஐகோர்ட்டு நேற்று முன்தினம் அதிரடியாக உத்தர விட்டது. இதற்கிடையே முன்னாள் முதல்–அமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்தின் மகன் ரவீந்திரநாத் மற்றும் ராம்குமார் ஆதித்தன், கே.சி.பழனிசாமி ஆகியோர் சுப்ரீம் கோர்ட்டில் கேவியட் மனு தாக்கல் செய்து உள்ளனர்.

அதில் தேர்தல் கமிஷன் விசாரணையை எதிர்த்து மேல்முறையீடு மனு தாக்கல் செய்யும் பட்சத்தில் தனது தரப்பு கருத்தையும் கேட்காமல் எவ்வித உத்தரவையும் பிறப்பிக்க கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

DINAMALAR
Dated:14.02.2025

# இடியாப்பம்!

- **அ.தி.மு.க., உள்கட்சி விவகார வழக்கில் மீண்டும்...**
- **தங்கள் தரப்பையும் விசாரிக்குமாறு ஓ.பி.எஸ்., மனு**

புதுடில்லி, பிப். 14–

**அ.தி.மு.க., உள்கட்சி விவகாரத்தில், தங்கள் தரப்பு வாதத்தை கேட்காமல், எந்த முடிவும் எடுக்கக்கூடாது எனக் கோரி, பன்னீர்செல்வம் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில், 'கேவியட்' மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனால், அ.தி.மு.க., உள்கட்சி விவகாரத்தில் மீண்டும் இடியாப்ப சிக்கல் ஏற்பட்டுள்ளது.**

'இரட்டை இலை சின்னம் உள்ளிட்ட, அ.தி.மு.க., உள்கட்சி விவகாரங்களை தேர்தல் ஆணையம் விசாரிக்கலாம்' என, சென்னை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது; தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு தடை கோரிய பழனிசாமியின் மனுவையும் தள்ளுபடி செய்தது.

### அதிகாரம் இல்லை

தீர்ப்புக்குப் பின் பேட்டியளித்த அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம், 'உள்கட்சி விவகாரங்களை விசாரிக்க, தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் இல்லை.

'கட்சியின்சட்ட திட்டங்களில் மாற்றங்கள் செய்து, அதன் விபரங்களை தெரிவித்தால். அதை அப்படியே ஏற்கும் குமாஸ்தா பணி தான் தேர்தல் ஆணையத்தின் வேலை' என, கூறியிருந்தார்.

இச்சூழலில், பொதுச் செயலராக பழனிசாமி தேர்வு செய்யப்பட்டது குறித்தும், இரட்டை இலை சின்னம் குறித்தும், தேர்தல் ஆணையம் விசாரிக்க இருப்பது சிக்கலை ஏற்படுத்தலாம்; இரட்டை இலை சின்னம் முடக்கப்படலாம் என்ற அச்சம், அ.தி.மு.க.,வினரிடையே ஏற்பட்டுள்ளது.

எனவே, சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக, அ.தி.மு.க., பொதுச் செயலர் பழனிசாமி தரப்பு, உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



பன்னீர்செல்வம்

இந்நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பன்னீர் செல்வம் சார்பில், உச்ச நீதிமன்றத்தில் நேற்று கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

அதில், 'அ.தி.மு.க., உள்கட்சி விவகாரம் தொடர்பான, சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக, யாரேனும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தால், எங்கள் தரப்பு வாதங்களை கேட்ட பின்னரே, எந்த ஒரு உத்தரவையும் பிறப்பிக்க வேண்டும்' என, கோரப்பட்டுள்ளது.

கடந்த 2021 சட்டசபை தேர்தல் தோல்விக்கு பின், 2022 ஜூனில் பழனிசாமி – பன்னீர்செல்வம் இடையே மோதல் ஏற்பட்டது.

### பிரச்னை தீரவில்லை

இரு தரப்பும் நீதிமன்றம் செல்ல, அ.தி.மு.க., உள்கட்சி விவகாரம், இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகிறது.

அதில், அவ்வப்போது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வரும் நிலையில், பழனிசாமி பொதுச்செயலராக தேர்வான பின்னும் பிரச்னை தீரவில்லை.

இந்நிலையில், உள்கட்சி விவகாரத்தை தேர்தல் ஆணையம் விசாரிக்க, உயர் நீதிமன்றத்தால் அனுமதி தரப்பட்டுள்ளது.

அதற்கு உச்ச நீதிமன்றம் சென்று, பழனிசாமி தடையுத்தரவு பெற்று விடக்கூடாது என்பதால், பன்னீர் செல்வம் முந்திக் கொண்டு உள்ளார்.

DINA KARAN

Dated: 14.02.2025

அதிமுக உட்கட்சி விவகாரத்தில்

# உச்ச நீதிமன்றத்தில் ஓ.பி.எஸ் கேவியட் மனு

புதுடெல்லி, பிப்.14: அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள தேர்தல் ஆணையத்துக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விரிவாக விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன் மற்றும் ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று முன்தினம் வழங்கிய உத்தரவில், "இரட்டை இலை சின்னம் மற்றும் அதிமுக உட்கட்சி விவகாரம் ஆகியவை தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரிக்கலாம். அதற்கு எந்தவித தடையும் இல்லை என்று தீர்ப்பளித்தனர். மேலும் இந்த விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்திருந்த மனுவையும் நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.



இந்த நிலையில் மேற்கண்ட வழக்கில் எதிர்மனுதாரராக இருக்கும் ஓ.பன்னீர்செல்வம் உட்பட அனைவரும் உச்ச நீதிமன்றத்தில் கேவியட் மனுவை தாக்கல் செய்துள்ளனர். அதில், "இரட்டை இலை சின்னம் மற்றும் அதிமுக உட்கட்சி விவகாரம் ஆகியவை தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரிக்க தடையில்லை என்று உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி உட்பட யாரேனும் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தால், எங்களது தரப்பு வாதங்களை கேட்காமல் எந்தவித உத்தரவையும் உச்ச நீதிமன்றம் பிறப்பிக்க வேண்டாம் என்று தெரிவித்துள்ளனர்.

DINAMANI

Dated: 14.02.2025

## அதிமுக உள்கட்சி விவகாரம்

# உச்சநீதிமன்றத்தில் ஓபிஎஸ் தரப்பு கேவியட் மனு

**புது தில்லி, பிப். 13:** அதிமுக உள்கட்சி விவகாரம் தொடர்பாக தங்களின் கருத்துகளைக் கேட்காமல் எந்த உத்தரவையும் பிறப்பிக்கக் கூடாது என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தரப்பு உச்சநீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

'அதிமுக உள்கட்சி தொடர்புடைய விவகாரத்தை தேர்தல் ஆணையம் விசாரிக்கத் தடையில்லை' என்ற சென்னை உயர்நீதிமன்றம் புதன்கிழமை தீர்ப்பை வெளியிட்டது.

இதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி மேல்முறையீடு செய்யலாம் என்பதால், தங்களின் கருத்துகளைக் கேட்காமல் எந்த உத்தரவையும் பிறப்பிக்கக் கூடாது என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தரப்பு, கே.சி. பழனிசாமி, ராம்குமார் ஆதித்தன் உள்ளிட்டோர் மனு தாக்கல் செய்துள்ளனர்.

அதிமுக பொதுச்செயலராக எடப்பாடி பழனிசாமியை தேர்ந்தெடுத்தது உள்ளிட்ட அதிமுக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிராகரிக்க வேண்டும் என்றும் உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கக் கூடாது என்றும் கோரப்பட்ட மனுக்களை தேர்தல் ஆணையம் விசாரிக்கக் கூடாது என உத்தரவிடுமாறு சென்னை உயர்நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி வழக்குத் தொடர்ந்தார். இதை விசாரித்த உயர்நீதிமன்றம் இந்த விவகாரத்தை தேர்தல் ஆணையம் விசாரிக்கத் தடை விதித்தது.

இதை எதிர்த்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிசாமி அதிருப்தி தலைவர்கள் சிலர் மீண்டும் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். அவற்றை நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன், ஜி. அருள்முருகன் அடங்கிய அமர்வு விசாரித்து, சின்னம் ஒதுக்கீடு விதிகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களின் மனுக்களை விசாரிக்க அதிகாரம் உள்ளதா என திருப்தியடைந்த பிறகே விசாரணையை தேர்தல் ஆணையம் தொடங்க வேண்டும் என்று கூறி முந்தைய நீதிமன்ற தடையை நீக்கியும் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.